பிரசார்பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை - 4

**08 10 2026** **THURSDAY** **6.30 PM**

## மாநிலச்செய்திகள்

## தலைப்புச் செய்திகள்

**1)** சரக்கு மற்றும் சேவை வரி தொடர்பான வழக்குகளை பதிவு செய்வதற்கான உச்சவரம்பை ஐந்து கோடி ரூபாயாக உயர்த்துவதென அதற்கான குழுமம் முடிவு செய்துள்ளது.

**2)** எரிசக்தித்துறையில் இந்தியா உலக அளவில் உற்பத்தி மையமாக திகழ்வதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக மத்திய அமைச்சர் திரு பிரல்ஹாத் ஜோஷி கூறியுள்ளார்.

**3)** வளர்ச்சியடைந்த இந்தியா என்ற இலக்கை எட்ட இளைஞர்கள் முழு பங்களிப்பை அளிக்க வேண்டும் என்று மத்திய இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் கேட்டுக்கொண்டுள்ளார்.

**4)** ஆசிய விளையாட்டு மற்றும் செஸ் ஒலிம்பியாட்டில் பதக்கம் வென்ற வீரர்களுக்கு முதலமைச்சர் திரு விஜய் பரிசுத்தொகையை இன்று சென்னையில் வழங்கினார்.

**5)** **Arctic** ஓபன் பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் பி வி சிந்து காலிறுதிக்கு முன்னேறியுள்ளார்.

--- இனி விரிவான செய்திகள் ---

<<<<<>>>>>>

சரக்கு மற்றும் சேவை வரி தொடர்பான வழக்குகளை பதிவு செய்வதற்கான உச்சவரம்பை ஐந்து கோடி ரூபாயாக உயர்த்துவதென அதற்கான குழுமம் முடிவு செய்துள்ளது.

புதுதில்லியில் இன்று நடைபெற்ற சரக்கு மற்றும் சேவை வரி குழும கூட்டத்திற்கு பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய மத்திய நிதியமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன், இதற்கான உச்சவரம்பு தற்போதைய ஒரு கோடி ரூபாயிலிருந்து, ஐந்து கோடி ரூபாயாக அதிகரிக்கப்படுவதாக தெரிவித்தார்.

இந்த கூட்டத்தில் சரக்கு மற்றும் சேவை வரி விதிப்பில் எந்த மாற்றமும் அறிவிக்கப்படவில்லை என்றும் அவர் தெரிவித்தார்.

10 ஆயிரம் ரூபாய்க்கு குறைவான சரக்கு மற்றும் சேவை வரி ஏய்ப்பு தொடர்பாக நோட்டீஸ் அனுப்பக் கூடாது என்று இந்த கவுன்சில் கூட்டத்தில் முடிவெடுக்கப்பட்டதாகவும் திருமதி நிர்மலா சீதாராமன் கூறினார்.

<<<<<>>>>>>

எரிசக்தித்துறையில் இந்தியா உலக அளவில் உற்பத்தி மையமாக திகழ்வதற்கு ஏற்ற நடவடிக்கையை மத்திய அரசு மேற்கொண்டு வருவதாக புதுப்பிக்கத்தக்க எரிசக்தித்துறை அமைச்சர் திரு பிரல்ஹாத் ஜோஷி தெரிவித்துள்ளார்.

சென்னையில் இன்று காற்றாலை எரிசக்தி தொடர்பான இரண்டு நாள் மாநாட்டை தொடங்கிவைத்து பேசிய அவர், காற்றாலை எரிசக்தி உற்பத்தியில் ஈடுபட்டுள்ள நிறுவனங்களுக்கு ஆதரவாக மத்திய அரசு செயல்படும் என்றார்.

பிரதமர் திரு நரேந்திர மோடி தலைமையில் நாட்டின் பொருளாதார வளர்ச்சி எட்டு சதவீதமாக உள்ளதாக குறிப்பிட்ட அவர், அனைத்துத் துறைகளிலும் நாடு வளர்ச்சி கண்டு வருவதாக கூறினார்.

கடந்த மே மாதம் வரையில் 271 கிகாவாட் எரிசக்தி உற்பத்தி செய்யப்பட்டுள்ளதாக கூறிய அவர், 2030-ஆம் ஆண்டுக்குள் காற்றாலை மற்றும் மரபுசாரா எரிசக்தி மூலம் ஆயிரம் கிகாவாட் மின் உற்பத்தி செய்வதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருவதாக தெரிவித்தார்.

சிறு-குறு மற்றும் நடுத்தர நிறுவனங்கள் மூலம் எரிசக்தித் துறை பயன்பெற்று வருவதாக அமைச்சர் குறிப்பிட்டார்.

உற்பத்தித் துறையில் சிறந்து விளங்குவதற்கான முயற்சி மேற்கொள்ளப்பட்டு வருவதாக கூறிய அவர், கடந்த நிதியாண்டில் காற்றாலை எரிசக்தித் துறை மூலம் ஆறு புள்ளி பூஜ்யம் ஐந்து கிகாவாட் மின்சக்தி உற்பத்தி செய்யப்பட்டதாகவும் இந்தாண்டு

ஆகஸ்ட் மாதம் வரை 58 புள்ளி ஐந்து இரண்டு கிகாவாட் மின்சக்தி உற்பத்தி செய்யப்பட்டதாகவும் குறிப்பிட்டார்.

இந்த மாநாட்டில் 20 நாடுகளிலிருந்து 400 பேர் பங்கேற்றுள்ளனர்.

இந்த மாநாட்டின் ஒருபகுதியாக அமைக்கப்பட்டுள்ள கண்காட்சியில் உள்நாட்டு மற்றும் ஜெர்மனி, டென்மார்க் ஸ்பெயின் உள்ளிட்ட வெளிநாட்டு மின் உற்பத்தியாளர்களின் அரங்குகளும் இடம்பெற்றுள்ளன.

காற்றாலை மின்சக்தி உற்பத்தியில் உலகிலேயே நான்காவது நாடாக இந்தியா விளங்குகிறது.

தற்போது 30 கிகாவாட் திறன் கொண்ட காற்றாலை மின்சக்தி உற்பத்தி மையங்களை அமைக்கும் பணி நடைபெற்று வருகிறது.

இந்தியாவில் காற்றாலை மின்சக்தியில் குஜராத் முதலிடத்திலும், தமிழகம் இரண்டாவது இடத்திலும், கர்நாடக மூன்றாவது இடத்திலும் உள்ளது.

<<<<<>>>>>>

காசநோயை ஒழிக்க இளைஞர்களின் பங்களிப்புடன் விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டு வருவதாக மத்திய சுகாதாரத்துறை அமைச்சர் திரு ஜெ பி நட்டா தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் இன்று, இப்பணிகளுக்கான இளையோரை கொண்ட சுகாதாரப்படை இயக்கத்தை அறிமுகப்படுத்தி அவர் பேசினார்.

முதல்கட்டமாக, தமிழகம் உட்பட 11 மாநிலங்களில் உள்ள 55 மாவட்டங்களில் இந்த இயக்கம் தொடங்கப்படுவதாக அவர் தெரிவித்தார்.

நடப்பாண்டில் 68 ஆயிரம் பஞ்சாயத்துகளில் காசநோய் முற்றிலும் ஒழிக்கப்பட்டுள்ளதாக அவர் கூறினார்.

வரும் 2030-ஆம் ஆண்டுக்குள் காசநோய் ஒழிப்பில் உலக சுகாதார அமைப்பின் இலக்கை எட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக திரு ஜெ பி நட்டா தெரிவித்தார்.

இந்த இயக்கத்தின் ஒருபகுதியாக தருமபுரி மாவட்டத்தில் காசநோய் தொடர்பான விழிப்புணர்வு கணக்கெடுப்புப் பணிகள் தொடங்கப்படுவதாக அம்மாவட்ட காசநோய் தடுப்பு பிரிவு துணை இயக்குநர் மருத்துவர் பாலசுப்பிரமணியம் எமது செய்தியாளரிடம் தெரிவித்தார்.

*(Voice Byte — பாலசுப்பிரமணியம் - 58 Sec.)*

<<<<<>>>>>>

வளர்ச்சியடைந்த இந்தியா என்ற இலக்கை எட்ட இளைஞர்கள் முழு பங்களிப்பை அளிக்க வேண்டும் என்று தகவல் ஒலிபரப்புத்துறை இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் தெரிவித்துள்ளார்.

நொய்டா கல்விக்கழகத்தில் மாணவர்களிடையே உரையாற்றிய அவர், வாய்ப்புகளை பயன்படுத்த இளைஞர்கள் தரமான கல்வி, திறன் மேம்பாடு பயிற்சி பெற வேண்டும் என்று கேட்டுக்கொண்டார்.

பிரதமர் திரு நரேந்திர மோடியின் தொலைநோக்கு பார்வையில் இளையோரின் பங்கு இன்றியமையாதது என்று அவர் கூறினார்.

கல்வியை, திறன், தொழில்நுட்பம், ஆராய்ச்சி, வேலைவாய்ப்புகளுடன் இணைக்க வேண்டியதன் அவசியத்தை அவர் வலியுறுத்தினார்.

தேசிய கல்விக்கொள்கை மூலம் நாட்டின் கல்வி திறன் மேம்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

இணையதள கல்வியின் முக்கியத்துவத்தை எடுத்துரைத்த டாக்டர் எல். முருகன், மாணவர்கள் கல்வி கற்பதற்கான வாய்ப்புகளை பயன்படுத்தி முன்னேற வேண்டும் என்று கூறினார்.

<<<<<>>>>>>

ஆசிய விளையாட்டுப் போட்டிகளில் பதக்கம் வென்ற தமிழக வீரர்களுக்கும், செஸ் ஒலிம்பியாட்டில் பதக்கம் வென்ற வீரர்களுக்கும் முதலமைச்சர் திரு விஜய் பரிசுத்தொகையை இன்று வழங்கினார்.

சென்னையில் இன்று நடைபெற்ற நிகழ்ச்சியில், ஆசிய விளையாட்டுப் போட்டிகளில் பதக்கம் வென்ற வித்யா ராம்ராஜ், பரணிகா இளங்கோவன் உள்ளிட்ட 19 பேருக்கும், செஸ் ஒலிம்பியாட்டில் பதக்கம் வென்ற பிரக்ஞானந்தா, குகேஷ், வைஷாலி, சவிதா ஸ்ரீ ஆகியோருக்கும் பரிசுத்தொகை வழங்கப்பட்டது.

தமிழகத்தை சேர்ந்த விளையாட்டு வீரர்கள் 3 தங்கம், 3 வெள்ளி, மற்றும் 13 வெண்கலப் பதக்கங்களை வென்றனர்.

தங்கப்பதக்கம் வென்றவர்களுக்கு தலா 75 லட்சம் ரூபாயும், வெள்ளிப்பதக்கம் வென்றவர்களுக்கு தலா 50 லட்சம் ரூபாயும், வெண்கலப்பதக்கம் வென்றவர்களுக்கு தலா 30 லட்சம் ரூபாயும் பரிசுத்தொகையை மாநில அரசு அறிவித்திருந்தது.

<<<<<>>>>>>

கோவை மாவட்ட மலைப்பகுதிகள் மற்றும் நீலகிரி, தேனி மாவட்டங்களின் ஒரிரு இடங்களில் அடுத்த மூன்று நாட்களுக்கு கனமழை பெய்யக்கூடும் என்று வானிலை ஆய்வு மையத்தின் தென் மண்டல இயக்குநர் டாக்டர் வி ஆர் துரை தெரிவித்துள்ளார்.

எமது செய்தியாளரிடம் பேசுகையில் அவர் இவ்வாறு கூறினார்.

***(Voice Byte — வி ஆர் துரை - 43 Sec.)***

<<<<<>>>>>>

*மாவட்டச் செய்திகள்*

தூத்துக்குடி மாவட்டம் எட்டயபுரம் அருகே இலங்கை தமிழர் மறுவாழ்வு முகாமில் அமைக்கப்பட்டுள்ள நூலகத்தை மாநில அமைச்சர் திரு தென்னரசு இன்று திறந்துவைத்தார்.

----------

ஈரோடு மாவட்டம் பெருந்துறை சிப்காட் தொழில்பேட்டையில் மாநில அமைச்சர் திரு செங்கோட்டையன் ஆய்வு மேற்கொண்டார்.

------------

உலக பார்வை தினத்தை முன்னிட்டு, சேலத்தில் நடைபெற்ற விழிப்புணர்வு பேரணியில் நூற்றுக்கணக்கான மாணவர்கள் பங்கேற்றனர்.

---------------

கடலூர் மாவட்டம் ஆலப்பாக்கத்தில் அமைந்துள்ள நெல் கொள்முதல் நிலையத்தை ஆட்சியர் திரு சிபி ஆதித்ய செந்தில்குமார் ஆய்வு செய்தார்.

<<<<<>>>>>>

*விளையாட்டுச் செய்திகள்*

**Arctic** ஓபன் பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் பி வி சிந்து காலிறுதிக்கு முன்னேறியுள்ளார்.

மகளிர் ஒற்றையர் பிரிவு காலிறுதிக்கு முந்தைய சுற்று ஆட்டத்தில் அவர், **21-15, 21-15** என்ற செட் கணக்கில், ஜப்பானின் **Riko**-வை வென்றார்.

-------------------

தென்காசி மாவட்டத்தில் தென் மண்டல அளவிலான பளுதூக்கும் போட்டி நடைபெற்றது. இதில் **300**-க்கும் மேற்பட்ட வீரர்கள் பங்கேற்றனர்.

**<<<<<END>>>>>>**